# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 07.05.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**காலிக் - படைப்பவன்** என்ற இறைபண்பு குறித்து விளக்க விரும்புகிறேன். அனைவரையும் படைத்தவன் இறைவன் என்பதை தனது அடியார்களுக்கு அல்லாஹ் தெளிவாக விளக்கியுள்ளான். மேலும் அவ்வாறு விளக்கியுள்ள நிலையிலும் சிலர் எனது சரியான அடியாராக இருப்பதில்லை. இந்த பண்பு குறித்து நான் விளக்குவதற்கு முன் சில அகராதிப் பொருள்களை விளக்குகிறேன்.

இறைவன் திருக்குர்ஆனின் எண்ணற்ற இடங்களில் தன்னை **காலிக்** என்று கூறியுள்ளான். இது அல்லாஹ்வின் பண்புப் பெயராகும். முஃப்ரதாத் அகராதியில் எழுதப்பட்டுள்ளது.

**கல்க் - அல் கல்க்** என்பதன் பொருள், ஒன்றை உருவாக்குவதற்கான சரியான மதிப்பீட்டுத்திறன் (பெற்றவன்) அதாவது ஒரு பொருளை எந்த மூலப் பொருளுமின்றி எந்த முன்னுதாரணமும் இன்றி உருவாக்குபவன் என்பதாகும்.

**வானங்களையும் பூமியையும் நுட்பமான ஞானத்துடன் படைத்தான். (6:74)**

**கல்க்** என்பதற்கு தொடங்குதல் என்ற பொருளும் உண்டு. **ஏனெனில், அவன் வானங்களையும், பூமியையும் எந்த முன்மாதிரியுமின்றி படைப்பவனாவான். (2:118)**

மேலும் ஒன்றை இன்னொன்றிலிருந்து உருவாக்குதல், கண்டுபிடித்தல் என்ற பொருளும் உண்டு.

**உங்களை ஒரே ஆன்மாவிலிருந்து படைத்தான். (4:2)**

**நாம் மனிதனை ஈரமான களிமண்ணிலிருந்து படைத்தோம். (23:13)**

புதிய பொருளை படைக்கும் இந்த கல்க் என்ற பண்பு இறைவனுக்கே உரிய சிறப்புப் பண்பாகும். இறைவன் தனக்கும் மற்றவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை விளக்கியவாறு கூறினான்.

**எனவே படைப்பவன் படைக்காதவனைப் போலாவானா? இருந்தும் நீங்கள் புரிந்து கொள்வதில்லையா? (16:18)**

**அல் காலிக், அல் கல்லாக்** இரண்டும் அல்லாஹ்வின் பண்புகளுள் உள்ளவையாகும்.**அல்** என்ற சொல்லுடன் இணைத்து அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் சொல்லப்படுவதில்லை. இதன் பொருள் எல்லா பொருள்களையும் இல்லாமையில் இருந்து உருவாக்குகிறான். கல்க் என்பதன் அடிப்படைப் பொருள் மதீப்பீடு செய்தல் என்பதாகும். அல்லாஹ் படைப்புகளை மதிப்பீடு செய்து அதற்கேற்ப அதனை உருவாக்குவதால் காலிக் என்றழைக்கப்படுகின்றான்.

அரபு அறிஞர்களின் கருத்துப்படி **கல்க்** என்ற சொல்லின் பொருள் முன்மாதிரியின்றி ஒன்றை உருவாக்குபவன் என்பதாகும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் படைப்பாற்றலை விளக்குவதற்கு வேறு சில பெயர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக **பாரி** - முன்னுதாரணமின்றி படைப்பவன்; படைப்பை தொடங்கியவன். **பதீ** என்ற சொல்லுக்கும் கிட்டத்தட்ட அதே பொருள். எந்த ஒரு கருவியும் சாதனமும் இல்லாமல் முன்மாதிரியும் இல்லாமல் உயரிய முறையில் உருவாக்குபவன். ஒரு பொருளை உருவாக்குவதற்கு அவனுக்கு இன்னொரு பொருளின் தேவை இல்லை. இன்னொரு சொல் **ஃபாதிர்**. இதனை இறைவனுக்கு

பயன்படுத்தும் போது அழகிய முறையில் தொடங்குபவன். இதில் பல சொற்கள் ஒன்றையொன்று ஒத்திருந்த போதிலும் அதனதன் இடத்தில் பொருள்களை தருகின்றான்.

இப்போது **காலிக்** என்ற சொல்லுக்கு திருக்குர்ஆன் அடிப்படையில் பொருள் கூறுகிறேன். நான் ஓதிய வசனத்தில்,

**மக்களே அல்லாஹ் உங்களுக்கு செய்த நிஃமத்துகளை நினைத்துப் பாருங்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு எவனாவது உங்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உணவளிக்கிற அவனைத் தவிர வேறு இறைவன் உண்டா? பிறகு நீங்கள் எங்கு திருப்பப்படுகிறீர்கள்? (35:4)**

மனிதனுக்கு அல்லாஹ் ஒரு தூதுச் செய்தியை தந்துள்ளான். அல்லாஹ் மனிதனை படைப்பினங்களுள் சிறந்த படைப்பினம் ஆக்கியுள்ளான். அவனை பராமரிக்க தனது நிஃமத்துகளையும் இறக்கினான். அல்லாஹ்வைத் தவிர வேறு யாராவது நமக்கு உணவு தருகிறார்கள் என்று நினைக்க வேண்டாம்.

இந்த ரிஸ்கை உருவாக்கியவனும் அல்லாஹ்தான். அவன் ரப்புல் ஆலமீன் ஆவான். பூமி உங்களுக்காக உணவை உருவாக்குகிறது. இந்த உணவை உருவாக்குவதற்கு கூட வானத்தின் உதவி தேவைப்படுகிறது. வானத்தில் நீர் இல்லையெனில் புவியில் நீர் காய்ந்து விடுகிறது. எனவே பூமியிலிருந்து உணவை உருவாக்குபவனும் இறைவனே ஆவான். வானத்தில் அதற்கான ஆதாரங்களை அமைத்தவனும் இறைவனே ஆவான். அதுவே பூமியில் ரிஸ்க் உருவாக காரணமாக அமைகிறது. திருக்குர்ஆனில் ஓரிடத்தில் இறைவன் கூறுகிறான்.

**உங்களது நீர் பூமியிலிருந்து மறைந்துபோய் விட்டால் பின்னர் பாய்ந்தோடும் தண்ணீரை உங்களுக்கு கொண்டு வருபவன் எவன்? என்பதை நீங்கள் எனக்கு கூறுங்கள். (67:31)**

பூமியின் நீரூற்றுகள், பாறைகளில் உள்ள பனி மலைகள் அனைத்தும் இறைவன் உருவாக்கியவன். பூமியின் வாழ்வுக்காக மனித குலத்தின் நிலைப்புக்காக சூரியன், சந்திரன் மற்ற கோள்கள் எல்லாம் முக்கிய பணியாற்றுகின்றன. இவை அனைத்தும் இறைவனது படைப்பினங்கள் ஆகும். உங்கள் உலக வாழ்க்கை மற்றும் எல்லா அருட்களுக்கும் படைப்பாளனாக இறைவன் இருப்பது போன்று உங்கள் ஆன்மீக வாழ்வுக்கான ஏற்பாட்டையும் அவன் செய்துள்ளான்.

இந்த ஆன்மீக மற்றும் உலகியல் வாழ்விற்கான ஏற்பாடுகளை ஒரு நல்லியல்பு கொண்ட மனிதனை ஓர் இறைவனுக்கே இபாதத் செய்ய வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. அவனே பௌதீக, ஆன்மீக வாழ்விற்கான ஏற்பாடு செய்துள்ளான்.

இறைவன் கூறுகின்றான்:

நினைவில் கொள்ளுங்கள். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இந்த உலகியல் உணவு தற்காலிகமானது. அசல் ரிஸ்க் ஆன்மீக உணவேயாகும். முழுமையான தவ்ஹீது உடையவராக ஆகாதவரை இது கிடைக்காது. இறைவனுக்கு மட்டுமே இபாதத் செய்பவராக ஆகாதவரை அது கிடைக்காது. இதுவே உண்மை ஆகும். இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகிற்கும் புரிய வைக்க வேண்டும்.

இந்த ஆன்மீக படைப்பின் உயர் முன்மாதிரியாக விளங்கும் மனிதர் இன்ஸானே காமில் என்று அழைக்கப்பட்டார். அல்லாஹ்வுடைய நிஃமத்துகளில் உண்மையான ஒரு வெளிப்பாட்டை – அது உலகியல் நிஃமத் ஆகட்டும் அல்லது ஆன்மீக நிஃமத் ஆகட்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செயல்படுவதன் மூலமே பெற முடியம். இதனை நாமும் நம்முன் வைக்க வேண்டும். உலகிற்கும் தெரிவிக்க வேண்டும்.

இது மிகவும் முக்கியமானது. நாம் இந்த நோக்கத்தை நிறைவேற்றுபவர் ஆவோமாக. அல்லாஹ்வின் அடியார் ஆக வேண்டும் என்ற இந்த உண்மையை உலகம் புரிந்து கொள்ளட்டுமாக.

பிறகு இன்னோரிடத்தில் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

**வானங்களையும் பூமியையும் படைத்து, மேகத்திலிருந்து உங்களுக்காக தண்ணீரை இறக்கியவன் எவன்? பின்னர் நாம் அதனைக் கொண்டு ஒளிமிக்க (பழத்) தோட்டங்களை வளரச் செய்தோம். அவற்றின் மரங்களை வளரச் செய்வது உங்களால் இயலாதிருந்தது. அல்லாஹ்வுடன் வேறு கடவுள் உண்டா? இல்லை. மாறாக அவர்கள் அநீதியிழைக்கும் சமுதாயத்தினராவர். (27:61)**

இவ்வாறு இறைவன் நமக்கு கவனமூட்டியுள்ளான். வானங்கள், பூமியின் அமைப்பை குறித்து ஆய்வு செய்யுங்கள். சிந்தனையையும் நீதியையும் மேற்கொள்வீர்கள் எனில் வானங்களையும் பூமியையும் படைத்த ஒரு இறைவன் இருக்கிறான் என்பதை மறுக்க முடியாது. பிறகு படைத்து (அப்படியே) விட்டு விடவில்லை. பிறகு கூறினான்: உங்களுக்காக வானத்திலிருந்து தண்ணீரை இறக்கினான். உங்கள் வாழ்வு நிலைத்து நிற்பதற்காக அதனை செய்தான்.

ஏற்கனவே நான் விளக்கி வந்துள்ளேன். பூமியிலிருந்து உங்கள் நீர் மறைந்து போய் விட்டால் என்ன செய்வீர்கள்? யார் திரும்ப கொண்டு வர முடியும்? ஆக இங்கு தனது இருப்புக்கான சான்றை தந்துள்ளான்.

தண்ணீரை அனுப்புவது இறைவனது வேலையாகும். பூமியில் வாழ்வதற்கு தண்ணீர் இன்றியமையாததாகும். பூமியில் உயிரினங்கள் இல்லாமல் இருந்தது. சில பாக்டீரிய இனங்கள் மட்டும் இருந்தன. கடும் வெப்பம் இருந்தது. எனினும் சாதாரணமாக, உயிரினங்கள் வாழும் சூழ்நிலை இருந்ததில்லை. அப்போது இறைவன் தண்ணீரின் மூலம் உயிரினங்களை உருவாக்கினான். தொடர்ந்து ஏற்பட்ட மழைகளால் பூமி தற்போதுள்ள உயிரினங்கள் உருவாகத் தகுதியுடையதாகியது. இவை அனைத்தும் இறைவனது திட்டங்களாகும். எனவே அவன் இந்த பிரபஞ்சத்தையும் மற்றும் எல்லா பொருள்களையும் படைத்தான். உங்கள் பகுதியின் ஆரோக்கியம், உணவு இவற்றை உருவாக்கும் பல மூலப் பொருள்களையும் இறைவனே உருவாக்கினான். வானத்திலிருந்து இறங்கிய தண்ணீர் மூலம் இந்த ஏற்பாட்டை செய்தான். தொடர்ந்து இந்த செயல் நடைபெறுகிறது. பூமியிலிருந்து தண்ணீர் வானத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. பிறகு தூய்மையானதும் தூய்மைப்படுத்தக்கூடியதுமான வாழ்வளிக்கும் தண்ணீர் மனித வாழ்வின் நிலைப்பிற்காக பூமியின் மீது இறங்குகிறது. இறைவன் கூறுகிறான்: உலக வாழ்வுக்கான இந்த ஏற்பாட்டை செய்யும் ஆற்றல் மனிதனுக்கு இல்லை.

எனவே இதன் பக்கம் கவனம் செலுத்தி இறைவன் பக்கம் குனியுங்கள்.

இதில் இன்னொரு விஷயமும் கவனமூட்டப்பட்டுள்ளது. நான் ஏற்கனவே இதனை கூறவும் செய்தேன். இறைவன் பௌதீகப் பொருள்களை ஏற்பாடு செய்தது போன்று தனது **ருபூபிய்யத்** (படைத்துக் காத்தோம்பும் பண்பு) –ன் கீழ் நமக்கு சொர்க்கத்திற்கான ஏற்பாடு செய்வது போன்று வணங்கும் நல்லடியாராகும் மனித படைப்பின் நோக்கத்தை நிறைவேற்ற ஏன் ஏற்பாடு செய்யமாட்டான்?

அல்லாஹ் கூறுகிறான்: இந்த பிறப்பின் நோக்கத்தை நினைவுபடுத்துவதற்காக நபிமார்களை அனுப்பும் ஏற்பாடு செய்தான். அவர்கள் மூலம் கவனமூட்டுகிறான். ஆன்மீக நீர் நபிமார்கள் மூலம் இறங்குகிறது.

மழைநீரின் மூலம் பூமியில் உயிரினங்கள் உருவாகின்றன. அடியார்களின் உணவாகிய தாவரங்கள் உருவாகின்றன. அந்த தாவரங்கள் அழிக்கின்ற பல்வேறு களைகள் உருவாகின்றன. சில இடங்களில் அவற்றை அழிப்பதே கஷ்டமாகி விடுகிறது. அதனை அழிப்பதற்குள் தாவரங்கள் அழிந்து விடுகின்றன. முன்னேறிய நாடுகளில் சில மருந்துகள் பயன்படுத்தி பூச்சிகளை அழிக்கின்றனர். சில நாடுகளில் அதன்

பொறுப்பாளர்கள் அவற்றை அழிப்பதில்லை. நஷ்டம் ஏற்படுகிறது. சில வேளைகளில் அதனை அழிக்கவே முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது.

இவ்வாறு ஒரு வகையில் பலன் தருகிற மழை. அம்மழையிலிருந்து சரியான பலன் பெறாத காரணத்தால் அதுவே நஷ்டம் தருகிற மழையாகி விடுகிறது.

ஆன்மீக மழை பெய்யும் போதும் இதே போன்று நல்லியல்பு கொண்டவர்கள் மட்டுமே பயனடைகின்றனர். எதிர்ப்பில் முன்னேறுபவர்கள், மார்க்கத்துடன் தொடர்பில்லாதவர்கள் இதிலிருந்து விலக்கப்படுவது மட்டுமின்றி தம்மை நெருப்பில் போட்டுக் கொள்கின்றனர்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் இதைத்தான் கண்டோம். ஏழைகள் இந்த மழையில் இருந்து பயனடைந்தனர். ரலியல்லாஹு அன்ஹு – அல்லாஹ் அவர்கள் மீது திருப்தி கொள்வானாக) என்ற தகுதியை அடைந்தனர். ஆனால் சில தலைவர்கள் உலகிலும் தீய முடிவை அடைந்தனர். ஆகிரத்திலும் அவர்களுக்கு தண்டனை தான் கிடைக்கும் என்று கூறியுள்ளான். இதே நிலை இக்காலத்திலும் நடந்துள்ளது. அல்லாஹ் ஓர் ஆன்மீக மழையை பெய்யச் செய்துள்ளான். அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர். அவரிடமிருந்து பயனடைந்தவர்கள் இறைவனது அன்பு மற்றும் பிரியத்தின் காட்சியை கண்டனர். தமது வாழ்விலேயே அது வளர்ந்து மலருவதைக் கண்டனர்.

எதிரிகள் அதிலிருந்து விலக்கப்பட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வடிவில் இறங்கிய அந்த வானத்து நீரினாலும் பல புற்பூண்டுகள் உருவாகின. ஆனால் தூய இயல்பு கொண்டவர்களின் ஈமானிய தோட்டங்களும் வயல்களும் தூய்மையாக இருந்ததால் ஈமான் மற்றும் உறுதி வளர்ச்சியடைந்தது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளால் அன்னாரது உண்மைப் பேரன்பரின் காலம் கியாமத் வரை நிலைநிற்கக் கூடியதாகும். எனவே (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு) எதிர்ப்பு என்ற புற்பூண்டுகளும் கூட தோன்றிக் கொண்டேயிருப்பதை நாம் பார்க்கிறோம்.

எனவே நமக்கு இறைவன் கவனமூட்டியுள்ளான். அல்லாஹ் நமக்கு அருள்புரிந்துள்ளான். வானத்திலிருந்து இக்காலத்தில் தண்ணீரை இறக்கினான். அதனைக் கொண்டு உங்கள் உள்ளம் என்ற தோட்டங்களை தளைத்தோங்க வைத்தான். அதிலிருந்து எப்போதும் சரியான பயனடைந்து கொண்டிருங்கள். அல்லாஹ்வின் அருளால் உங்களுக்கு ஹிதாயத் கிடைத்துள்ளது. அதனை கண்ணியப்படுத்துங்கள். உங்கள் தக்வா மற்றும் அமல் என்ற மரங்களை இந்த நீரால் கவனமூட்டுங்கள்.

திருக்குர்ஆனின் போதனையின்படி செயல்படுங்கள். அதற்காக முயற்சி செய்து வாருங்கள். ஒரே இறைவனை இபாதத் செய்வதன் பக்கம் கவனமூட்டுங்கள்.

அல்லாஹ்விடம் உதவி கேட்டு வாருங்கள். சில நேரங்களில் தீய வயல்களில் உள்ள புற்பூண்டுகளின் விதைகள் நல்ல வயல்களையும் வந்தடைகின்றன. வருங்காலத்தில் நஷ்டம் ஏற்படுத்த விளைகின்றன. நல்ல பொறுப்பாளர்கள் தமது வயலில் தீயவற்றைக் கண்டால் உடனே அதனை அழிக்க முயலுகின்றனர். அதேபோன்று உங்கள் உள்ளத்தின் வயல்களை தூய்மையாக்கிக் கொண்டிருங்கள். இந்த உலகத்தின் சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தால் பிறகும் கூட ஏதாவது தாக்கம் ஏற்படவே செய்கின்றது. அதனை தூய்மையாக்குங்கள். அப்போதுதான் நீங்கள் படைத்தவனும் அதிபதியுமாகிய இறைவனின் அடியான் ஆவதற்கான உரிமையை நிறைவேற்றியவராவீர்கள்.

இறைவன் கூறுகிறான்: நற்செயல்களைச் செய்து வருவது உங்களால் முடிகின்ற காரியமல்ல. மாறாக இவை அனைத்தும் இறைவனின் அருளால் செய்கிற காரியங்களாகும்.

எனவே இதனை கண்ணியம் செய்யுங்கள். அல்லாஹ்வை உண்மையான வணக்கத்திற்குரியவன் என்று கருதுங்கள். அவனை இபாதத் செய்வதிலிருந்து கவனமற்று விடாதீர்கள் என்று இபாதத்தின் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகிறான்.

**துன்பத்திற்காளானவர், அவனிடம் பிரார்த்தனை செய்யும் போது அவரு(டைய வேண்டுதலு)க்குப் பதிலளித்து (அவரது) தீங்கை அகற்றி (வேண்டுதல் புரியும்) உங்களை இப்பூமி முழுவதற்கும் வாரிசுகள் ஆக்குபவன் எவன்? (இத்தகு ஆற்றல் பெற்ற) அல்லாஹ்வுடன் வேறு கடவுள் உண்டா? நீங்கள் அறவே உணர்வதில்லை. (27:63)**

அல்லாஹ் கூறுகிறான்: துன்பத்திற்காளானவரின் துஆவை கேட்பவன் யார்? அவர்கள் மிகவும் இயலாதவர்கள். அவர்கள் அல்லாஹ்வின் முன் குனிகின்றனர். விடுபடுவதற்கு எந்த வழியும் இல்லாத நிலையில் இறைவன் முன்னால் அம்மனிதன் வருகிறான். உலகில் எல்லா வாசல்களும் அடைபட்டு விட்டன. இறைவனே நீ இந்த வானங்கள் பூமியின் படைப்பாளியும் அதிபதியும் ஆவான். ஆன்மீக மழை இறங்குவது உனது வெகுமதியாகும்.

உனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களை ஏற்றுக் கொள்வதும் கூட உனது அருட்கொடையாகும். ஆனால் அவரை ஒப்புக் கொண்ட பிறகு உலகம் எனக்கு கஷ்டம் கொடுக்கிறது. எனக்கு வருகிற கஷ்டங்களை அகற்றுவதும் நீயே தான். எனவே எனது இந்த சோதனையை என்னை விட்டு அகற்றி விடுவாயாக.

நாம் பார்க்கிறோம். இக்காலத்தில் பாகிஸ்தானிலும் அஹ்மதிகள் மீது ஒரு நீண்ட காலமாக தொல்லைகள் தரப்படுகின்றன. அவற்றை அகற்ற வேண்டும் எனில் தூய்மையான முறையில் அவன் முன்னால் குனிய வேண்டும். இதனை அகற்ற வேறு எந்த வழியும் இல்லை. இப்போது இன்னும் சில நாடுகளும் இவ்வரிசையில் சேர்ந்துள்ளன. உதாரணமாக மிஸ்ர் (எகிப்து) போன்ற நாடுகளில் அஹ்மதிகளுக்கு கஷ்டம் தரப்படுகின்றன.

இதற்கு ஒரே தீர்வு தான் உள்ளது. இறைவன் முன் குனிய வேண்டும். இறைவன் கூறுகிறான். இதுபோன்ற திக்கற்ற நிலையில் துஆ செய்யப்படும் போது நான் அதனை கபூல் செய்கிறேன்.

மனிதனைப் படைத்த பிறகு இறைவன் அவனை விட்டு விடவில்லை. மாறாக ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத்தின் ஒளி கூடவே அவனை தொடர்கிறது. அல்லாஹ்வின் முன் களங்கமற்ற முறையில் மனிதன் குனியும் போது நான் அவனது கஷ்டங்களை அகற்றுவது மட்டுமின்றி எனது அன்பிற்குரியவர்களை பூமியின் வாரிசாக்குகிறேன் என்று கூறுகிறான்.

அஹ்மதிகளின் மீது கஷ்டங்கள் கொடுக்கப்படுகின்றது என்றால் அல்லாஹ்வின் அன்பிற்குரியவரை உண்மையாளர் என்று ஏற்றுக் கொண்டதால் கொடுக்கப்படுகின்றது. அல்லாஹ் நிச்சயமாக ஆற்றல் பெற்றவன் ஆவான். நீங்கள் இன்று பூமியின் வாரிசாகி அமர்ந்திருக்கிறீர்கள். உங்களின் இடத்தில் இறைவன் தனது நேசத்திற்குரியவரை – நேசிப்பவரை வாரிசாக்குவான். நீங்கள் உலகவாதிகளை வணக்கத்திற்குரியவையாக்கி எனது அன்பிற்குரியவர்களுக்கு கஷ்டம் கொடுக்கிறீர்கள். பாருங்கள் என்னைத் தவிர இவ்வுலகிற்கு அதிபதி எவனும் இல்லை. என்னைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லை. பாருங்கள்! நான் நற்செயல் செய்கிற எனது நல்லடியார்களுக்கு எவ்வாறு உதவி செய்கிறேன் என்று கூறுவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த வசனத்தில் **முழ்தர்** என்ற சொல்லின் பொருள், சோதனைக்காக கஷ்டம் தரப்பட்டு, அதிலிருந்து வெளிவருவதற்கு தேவையுடையவர் என்பதாகும். தண்டனையாக கஷ்டம் தரப்பட்டவர் அல்ல. தண்டனையாக ஏதாவது கஷ்டம் தரப்பட்டால் அவர் இந்த வசனத்தின் கீழ் வரமாட்டார்.

நூஹின் சமுதாயம், லூதின் சமுதாயம் தண்டனை பெற்றன. சோதனை கொடுக்கப்பட்டன. பிர்அவ்னின் சமுதாயம் சோதனைக்குள்ளாக்கப்படும் போது இந்த கதியற்றவர்கள் ஒப்புக் கொள்ளப்படும் துஆவுக்குரியவர்களாகவில்லை. மாறாக இறைவனின் கை அந்த சமுதாயங்களை அழித்தது. எங்கெல்லாம் அஹ்மதிகளுக்கு கஷ்டம் கொடுக்கிறார்களோ அவர்கள் நினைவில் கொள்ளட்டும். அஹ்மதிகள் மட்டும்தான்

சோதனைக்காக கஷ்டத்திற்கு உள்ளாக்கப்படுபவர்கள் ஆவர். அத்தகைய கதியற்றவர்களின் துஆவை ஒப்புக் கொள்வதாக அல்லாஹ் வாக்குறுதி அளிக்கிறான்.

உலகின் மற்ற பகுதிகளில் துன்பத்திற்குள்ளாகுபவர்கள் தண்டனை என்ற முறையில் அனுபவிக்கின்றனர்.

எனவே ஒரு கதியற்றவரின் தகுதியை உங்கள் துஆவில் கொண்டு வாருங்கள். பிறகு அல்லாஹ் எவ்வாறு உங்கள் கஷ்டங்களை அகற்றுகிறான் என்று பாருங்கள்.

**ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். இறைவன் மிகவும் அருளுக்குரியவன் ஆவான். அதிக அளவில் மிகவும் உருகி திரும்பத் திரும்ப துஆ செய்யவில்லை எனில் இறைவன் பொருட்படுத்தமாட்டான்.

அல்லாஹ்வை மட்டுமே அடைக்கலமாக கருதி துஆ செய்யும் வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.

அல்லாஹ் கூறுகின்றான்:

**நிலம், கடல் ஆகியவற்றின் (பல்வேறு வகையான) இருள்களில் உங்களுக்கு வழிகாட்டுபவன் எவன்? மேலும் தன் அருளுக்கு (அதாவது மழைக்கு) முன்னால் நற்செய்தியாகக் காற்றுகளை அனுப்புகிறவன் எவன்? அல்லாஹ்வுடன் வேறு கடவுள் உண்டா? அவர்கள் (அவனுக்கு) வைக்கும் இணைகளை விட அல்லாஹ் மிக்க மேலானவன். (27:64)**

பிறகு உலகியல் அரசர்களைப் பற்றி வருகிறது. கஷ்டங்களிலிருந்து ஈடேற்றம் பெறுவது பற்றி வருகிறது. ஆன்மீக இருள்களைப் பற்றி வருகிறது.

இறைவனது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வரும் முன்னர் இறைவனை ஏற்றுக் கொண்டவர், ஏற்றுக் கொள்ளாதவர் இருவருமே இறைவனை விட்டு தூரம் போய் விடுகின்றனர். இருளில் மூழ்கிக் கிடக்கின்றனர். இறைவன் தனது படைப்பினங்களின் முன்னேற்றங்களின் முன்னேற்றத்திற்கு ஆயத்தங்களை செய்தவாறு பிறகு நபிமார்களை அனுப்புகிறான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தைப் பற்றி திருக்குர்ஆன் கூறுகிறது.

மக்களின் கைகள் செய்த செயல்களினால், நிலத்திலும் கடலிலும் குழப்பம் பரவியுள்ளது. (30:42)

இறைவனின் மீது நிச்சய உறுதி கொண்ட மக்களும் குழப்பத்தின் எல்லை வரை சென்றிருந்தனர். இறைவனின் மீது நம்பிக்கை கொள்ளாத மக்களும் தங்களின் குழப்பத்தின் எல்லையை சென்றடைந்திருந்தனர். இந்நிலையில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எழுப்பினான். சில நல்லியல்பு கொண்ட மக்கள் அப்போது குளிர்ந்த நீரின் வருகையை உணர்ந்தனர்.

ஒரு கிறித்தவ துறவியைப் பற்றி வருகிறது. நுபுவ்வத் வரப் போவது பற்றி செய்தி தெரிவித்தார். அதுபோன்று இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை தாசரின் காலத்தில் முஸ்லிம்கள் உட்பட எல்லா மார்க்கத்தவரின் ஈமானிய நிலையும் தடம்புரண்டே இருந்தது. இப்போதுவரை உருவாகி உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றுவதற்கு முன்னரும் ஒரு சீர்திருத்தவாதியின் வருகையை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வழிகேட்டு எல்லையைத் தொட்டிருந்தது. அவர்களுள் சிலர் ஒரு சீர்திருத்தவாதியின் வருகையை அறிவித்த போது மறுத்து விட்டனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வருகையை குறித்து அறிவித்தவாறு மக்களைக் குறித்து கூறுகிறார்கள். இறைவனின் அடியார்களே! நீண்ட காலம் மழை பொழியவில்லை எனில் கிணறுகள் கூட வற்றிப்போய் விடுகின்றன என்பதை அறிவீர்கள். பௌதீகரீதியாக வானில் (மழை) நீர் பூமியின் நீருக்கு

ஒரு வேகத்தை தருவது போன்று ஆன்மீக ரீதியாக வானத்து நீராகிய இறைவனது வஹி மனித அறிவுக்கு புத்துணர்வு வழங்குகிறது. எனவே இக்காலமும் அந்த ஆன்மீக நீருக்கு தேவை உடைய காலமாக இருந்தது.

எனது வாதத்தைப் பற்றி நான் கூறு விரும்புவது என்னவெனில் நான் தேவையான நேரத்தில் மிகச்சரியாக இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன். இக்காலத்தில் பலர் யஹூதுகளின் சாயலைப் பெற்று விட்டனர். தக்வா, தூய்மையை விட்டு விட்டது மட்டுமன்றி யூதர்களைப் பற்றி சத்தியத்தின் எதிரியாகவும் ஆகிவிட்டனர். இந்நிலையில் அல்லாஹ் எனக்கு மஸீஹ் என்று பெயரிட்டான். நான் இக்காலத்து மக்களை இறைவன் பக்கம் அழைக்க வேண்டும் என்பதற்காக மட்டுமின்றி இக்காலமும் என்னை அழைத்து வந்துள்ளது.

**இறைவன் கூறுகிறான்:**

**முதன் முறையாகப் படைப்பைத் துவக்கி அதை மீண்டும் செய்பவன் எவன்? மேலும் வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் எவன்? அல்லாஹ்வுடன் வேறு கடவுள் உண்டா? நீர் கூறுவீராக. நீங்கள் உண்மையாளர்களாயின் (அவனுடன் வேறு கடவுளரும் உண்டு என்பதற்கான) உங்கள் சான்றைக் கொண்டு வாருங்கள். (27:65)**

அல்லாஹ் ஒவ்வொரு விஷயமும் கூறிவிட்டு, இத்தகைய இறைவனைத் தவிர வேறு கடவுள் உண்டா? என்று கேட்கின்றனர். இந்த வசனத்திலும் தனது படைப்பாற்றல் பற்றி கூறுகிறான். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் பார்வையில் முதன்முறையாக படைப்பை தொடங்குதல் என்பதன் பொருள், சமுதாயங்களை உறுதிப்படுத்தி நிலைபெறச் செய்தல், யஇதுஹு – அதன் மீண்டும் செய்தல் என்றால் மிகைத்து நிற்கும் சமுதாயங்களின் வீழ்ச்சிக்குப் பிறகு புதிய வாழ்வுக்கான ரூஹ் வழங்குதல், அதாவது நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். ஒரு சமுதாயம் முன்னேற்றம் அடைகிறது என்றால் இறை உதவியினால்தான் வளர்ச்சி பெறுகின்றன என்பது உங்களுக்கு தென்படும். பிறகு அவர்களுக்கு வீழ்ச்சிக்குப் பிறகு ஒரு வாழ்க்கை கிடைத்தால் அது கூட இறை நியதிக்கு ஏற்பவே கிடைக்கிறது. இவை அனைத்தும் சுயமே உருவாகி விடவில்லை. இந்த விஷயம் குறித்து தான் இப்போது முஸ்லிம்களுக்கும் கவனமூட்டப்பட்டுள்ளது. உங்களுக்கும் அல்லாஹ்வின் அருளால் வெற்றி கிடைக்கும். அதற்கு எந்த வன்முறை அல்லது ஆயுத ஜிஹாதின் தேவையும் இல்லை.

வெற்றி பெற வேண்டும் எனில் இறைவனது அருள்களை ஈர்த்தவாறு தான் பெற இயலும். எனவே இக்காலத்தில் அல்லாஹ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். அன்னார் நமக்கு வெற்றிக்கான ஆயுதத்தை தந்துள்ளார்கள். அது இறைவன் புறமிருந்து நமக்கு ஆதரவாக தரப்பட்ட ஆதாரங்கள் சான்றுகள் ஆகும். இவை அனைத்தும் துஆவின் மூலமே நடைபெற முடியும் என்று கூறியுள்ளான். எனவே நாம் இறைவன் முன் களங்கமற்ற முறையில் குனிவது அவசியமாகும். முஸ்லிம்கள் தமது புதிய பிறப்பை காண விரும்பினால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வுக்கு முன் களங்கமற்ற முறையில் வர வேண்டும். மற்றபடி ஆயுதம் ஏந்துவது கொண்டு நடக்கப் போவதில்லை. வன்முறையின் மூலம் நடக்கப் போவதில்லை.

மீண்டும் இறைவன் இந்த வசனத்தில் திரும்பக் கூறுகிறான்: ரிஸ்க் உங்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் கிடைக்கிறது எனில் அது இறைவன் தான் தருகின்றான். எனவே இறைவன் முன் குனியுங்கள். அவனிடமே எல்லா நன்மைகளையும் கேளுங்கள். அஹ்மதிகளுக்கு கடமை என்னவெனில் அல்லாஹ்வின் உதவியின்றி பௌதீக ரிஸ்கும் கிடைக்க முடியாது. ஆன்மீக உணவும் கிடைக்க முடியாது.

சில அஹ்மதிகளும் இந்த விதியை மறந்து விடுகின்றனர். பலமுறை இதனை நான் கூறியுள்ளேன். இருந்தும் அவ்வப்போது ஏதாவது நிகழ்ந்து விடுகின்றன. எனவே கூறுகிறேன். இப்போது அதனை கூறுவதற்கு மிகவும் அவசியம் உள்ளது. உங்கள் தொழுகைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். பேணுங்கள். சிலர்

துஆவுக்காக என்னிடம் கூறுகின்றனர். அவர்களின் முகத்தைப் பார்க்கும் போதே அவர்கள் சம்பிரதாயமாக கூறுகின்றனர் என்பதை தெரிந்து கொள்கிறேன். நீங்கள் தொழுகின்றீர்களா? துஆவின் பக்கம் கவனம் செலுத்துகின்றீர்களா? என்று திருப்பிக் கேட்டால் அவர்களின் பதில் எதிர்மறையாகவே இருக்கிறது. இதுவும் மிகவும் பயப்படத்தக்க நிலையாகும். **தொழுகையை கைவிட்டவராக நம்மில் ஒருவரும் இருக்கக் கூடாது.**

கடந்த சில நாள்களுக்கு முன் ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஒரு தந்தையும் மகனும் எனனை சந்திக்க வந்திருந்தார்கள். தந்தை மகனின் முன்னாலேயே மகனைப் பற்றி என்னிடம் புகார் சொல்லத் தொடங்கினர். இவன் சரியாக தொழுவதில்லை. மகன் நல்ல தொழில் செய்பவர் அதில் மட்டும் தான் கவனம் உள்ளது என்று கூறினர். அந்த மகனும் தனது தொழிலுக்காக துஆ செய்யுமாறு என்னிடம் கூறினார். இது இறைவனோடு நீங்கள் செய்யும் கேளிக்கையாகும்.

நான் கூறினேன். இது இறைவனால் வழங்கப்பட்டதாகும. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தமது தொழில் அபிவிருத்திக்காக மட்டும் என்னிடம் ஒருவர் துஆவுக்காக விண்ணப்பிக்கின்றார் எனில் அவரைக் குறித்து எனக்கு ஒரு வெறுப்பு ஏற்படுகிறது. உலக வாழ்க்கையில் தொழிலில் அபிவிருத்தி இருப்பது அவசியம்தான். அது இல்லாமல் முடியாது. ஆனால் உலகம் மட்டும் நோக்கமாக இருக்கக் கூடாது. அல்லாஹ்வுடைய கடமைகளை முதலில் நிறைவேற்ற வேண்டும். இதன் பக்கம் ஒவ்வொரு அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டும். நான் அவரிடம் தொடர்ந்து சொன்னேன்.

உங்கள் தொழில் நன்றாக சென்று கொண்டிருக்கிறது. அல்லாஹ்வின் ஓர் அருளாகும். இறைவன் உங்கள் தொழில் நன்றாக வைத்திருப்பதற்கு சக்தி படைத்திருப்பது போன்று உங்களுடைய இந்த மகிழ்ச்சியை அகற்றி விடவும் சக்தி படைத்தவன்.

எனவே எப்போதும் அவனது அருளை ஈர்ப்பதற்காக இறைவனுக்கு இபாதத் செய்ய வேண்டியது அவசியமாகும். இது மனித படைப்பின் பெரும் நோக்கமாகும். எனவே எப்போதும் அவனை உண்மையான வணக்கத்திற்குரியவனாக ஏற்றுக் கொள்ளும் போது, அவன் முன் குனியும் போது தான் அவனை **காலிக்** - படைத்தவன் என்றும், **மாலிக்** - அதிபதி என்றும் ஏற்றுக் கொண்டதற்கான கடமையை நிறைவேற்றியவர்களாவோம்.

இறைவன் நம் அனைவருக்கும் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAITUL FUTUH MOSQUE, LONDON

ON 07.05.2010

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**